# முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்: ஊரகப் பகுதிகளில் அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர் !



முதலைமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை அரசு உதவி பெறும் குல்லூர்சந்தை தொடக்கப் பள்ளியில் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் தலைமையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்.



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி ஊராட்சி ஒன்றியம் கல்லூரணி எஸ்.பி.கே. தொடக்கப்பள்ளியில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அரசு உதவி பெறும் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை துவக்கி வைத்து மாணவர்களுடன் உணவு அருந்தினார்.



சிவகங்கை மாவட்டம் மகிபாலன்பட்டி ஸ்ரீ பணிக்கர் உடையவர் தர்மசாலா சாலை நடுநிலைப்பள்ளியில் முதல்வரின் திட்டமான அரசு உதவி பெறும் பள்ளிக்கான காலை உணவு திட்டத்தினை கூட்டுறவுத்துறை அமைச்சர்கேஆர்.பெரிய கருப்பன் துவக்கி வைத்து மாணவர்களுடன் உணவு அருந்தினார். மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசா அஜித் உடன் உள்ளார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை, திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கீழச்சேரி, அரசு உதவி பெறும் புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் நேற்று(15.07.2024) தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் மாவட்டம், கள்ளிமந்தையம் சி.எஸ்.ஐ. அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை தொடங்கி வைத்து, குழந்தைகளுடன் உணவு அருந்தினார்.



இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி அருகே உள்ள கன்னிராஜபுரம் அரசு உதவி பெறும் சத்திரிய நாடார் நடுநிலைப் பள்ளி 1 முதல் 5 ஆம் வகுப்பு மாணாக்கர் 236 பேருக்கு காலை உணவு திட்ட துவக்க விழா நேற்று நடந்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் விஷ்ணு சந்திரன் தலைமை வகித்தார். அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், துவக்கி வைத்தார். உடன் நவாஸ் கனி எம்.பி., இன்பா ரகு, சாயல்குடி ஜெயபால், பூபதி மணி, ஆப்பனூர் ஆறுமுகவேல்,கோவிந்தராஜ், குலாம் முகைதீன், அண்ணாமலை, சண்முகநாதன், சத்தியேந்திரன், ரஞ்சித் மணிகண்டன், தமிழ் செழியன், ரேணுகா, முருகேஷ், தமிழ் செழியன், தலைமை ஆசிரியை மலர் விழி, வேலுச்சாமி, ஆர்த்தி, முரளிதரன், ஜெய ஆனந்த், சுப்ரமணியன் உள்பட பலர் பங்கேற்றனர்.




இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா ஊராட்சி ஒன்றியம் அனந்தலை ஊராட்சி பண்டித மாளவியா அரசு நிதி உதவி நடுநிலைப் பள்ளியில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை தொடங்கி வைத்து பள்ளி குழந்தைகளுடன் உணவு அருந்தினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ச.வளர்மதி, திட்ட இயக்குனர் ஊரக வளர்ச்சி முகமை திருமதி ஜி. லோகநாயகி, மகளிர் திட்ட இயக்குனர் ரவிச்சந்திரன், வாலாஜா ஒன்றிய குழு தலைவர் சேஷா வெங்கட், முதன்மை கல்வி அலுவலர் திருமதி உஷா, ஊராட்சி மன்ற தலைவர் தேவகி மகாதேவன் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.




திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை தமிழ்நாடு மாநில அளவில் அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவங்கி வைத்ததை தொடர்ந்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகிலுள்ள தனிச்சியத்தில் உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு உணவு வழங்கி குழந்தை களுடன் சேர்ந்து அமர்ந்து உணவருந்தினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மோனிகா ரானா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன் உட்பட பலர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், கீழச்சேரி, அரசு உதவி பெறும் புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் இந்த ஆண்டின் கல்வி வளர்ச்சி நாளில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் தொடங்கி வைத்தார். அதனைத் தொடந்து தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன். கடலூர் மாவட்டம், விருத்தாசலம் ஒன்றியம், கோவிலானூர் அரசு உதவிபெறும் ஆர்.சி. நடுநிலைப் பாள்ளியில் காலை உணவுத் திட்டத்தை தொடங்கிவைத்தார். உடன் விருத்தாசலம் சட்ட மன்ற உறுப்பினர் எம்.ஆர்.ஆர். ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆட்சியர்( ஊரக வளர்ச்சி) சரண்யா ராமச்சந்திரன், வருவாய் கோட்டாசியர் அ.ர. சையத் மஹ்மூத் , முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.